# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.2.4.B

எண்ணியல் - பயிற்சிக்கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 1.4.5-7

## எண்ணியல் - பயிற்சிக்கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 1.4.5-7

5) ஓர் இடத்தில் வெப்பம் சீராக குறைகிறது. மேலும் 8 மணிநேர இடைவெளியின்போது, வெப்பம் $24^{\circ}c$ குறைந்தது எனில், ஒவ்வொரு மணி நேர இடைவெளியிலும் குறைந்த வெப்பத்தின் அளவு என்ன?

8 மணிநேர இடைவெளியின்போது குறைந்த வெப்பத்தின் அளவு $= 24^{\circ}c$

∴ ஒவ்வொரு மணிநேர இடைவெளியின்போதும் குறைந்த வெப்பத்தின் அளவு $= \frac{24}{8} = 3^{\circ}c$

$$8\,\overline{)24} = 3;\quad 24,\ 0$$

ஒவ்வொரு மணி நேர இடைவெளியிலும் குறைந்த வெப்பத்தின் அளவு $3^{\circ}c$ ஆகும்.

6) ஒரு மின்தூக்கி (Elevator) சுரங்க வாயிற்குழியில் 5 மீ/நிமிடம் என்ற வீதத்தில் கீழ்நோக்கிச் செல்கிறது. தரை மட்டத்திலிருந்து மேலே 15 மீட்டரிலிருந்து மின்தூக்கி செயல்படுகிறது எனில், -250 மீட்டர் கீழ்நோக்கிச் செல்ல ஆகும் நேரம் எவ்வளவு?

மின்தூக்கி சுரங்க வாயிற்குழியில் செயல்படுகிறது. மேலும், அது -250 மீ கீழ்நோக்கிச் செல்வதை தரைமட்டத்திற்கு கீழே செல்வதாகக் கொள்க.

சுரங்க வாயிற்குழியில் மின்தூக்கியின் திசைவேகம் = 5 மீ/நிமிடம்

மின்தூக்கியின் தற்போதைய நிலை = 15 மீ தரைமட்டத்திலிருந்து மேலே

மின்தூக்கி கீழ்நோக்கிச் செல்ல வேண்டிய தூரம் = 250 மீ தரைமட்டத்திலிருந்து கீழே

மின்தூக்கி கீழ்நோக்கிச் செல்ல வேண்டிய மொத்த தூரம் = 15 + 250 = 265 மீ

மின்தூக்கி கீழ்நோக்கிச் செல்ல ஆகும் நேரம் $= \frac{265}{5}$ = 53 நிமிடங்கள்

$$5\,\overline{)265} = 53;\quad 25,\ 15,\ 15,\ 0$$

மின்தூக்கி இப்போது இருக்கும் நிலையிலிருந்து 250 மீட்டர் தரைமட்டத்திலிருந்து கீழ்நோக்கிச் செல்ல 53 நிமிடங்கள் ஆகும்.

7) 30 நாட்கள் நடைப்பயணத்திற்குப் பிறகு, நான் 4800 கலோரிகள் இழந்திருந்தேன். என் கலோரி இழப்பு சீரானது எனில், ஒரு நாளில் இழந்த கலோரியைக் காண்க.

நடைப்பயணம் செய்த மொத்த நாட்களின் எண்ணிக்கை = 30

இழந்த மொத்த கலோரிகளின் எண்ணிக்கை = 4800

∴ ஒரு நாளில் இழந்த கலோரிகளின் எண்ணிக்கை $= \frac{4800}{30}$ = 160 கலோரிகள்

$$30\,\overline{)4800} = 160;\quad 30,\ 180,\ 180,\ 00$$

ஒரு நாளில் நீ இழந்த கலோரிகளின் எண்ணிக்கை 160 ஆகும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 1st June, 2022 :: 17:27 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**